# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது ப்ராம்ப்ட்டன் நகர கல்லறைத் தோட்டத்தை மிகக் குறைந்த பேர்களே அணுகும் வகையிலும் குறைவான நேரத்திற்கு மட்டுமேயும் திறக்கவிருக்கிறது.

ப்ராம்ப்ட்டன், ON (மே 7, 2020) – மே 9, 2020 சனிக்கிழமை துவங்கி, பிராம்ப்டன் நகர நிர்வாகமானது, எண் 10 வில்சன் அவென்யூவில் அமைந்துள்ள ப்ராம்ப்ட்டன் நகர கல்லறை தோட்டத்தை மீண்டும் திறக்கவிருக்கிறது; வருகை தருபவர்கள் மற்றும்  ஊழியர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மிகக் குறைவான பேர்கள் மட்டுமே வந்து செல்லும் அளவுக்கே திறக்கப்படும்.

கல்லறை தோட்டத்திற்கான அணுகலானது, சர்ச் ஸ்ட்ரீட்டில் (பீச் ஸ்ட்ரீட்டிற்கு மிக அருகில்) இருக்கின்ற நுழைவாயில் வரை மட்டுமே இருக்கும்.

நகரத்தின் 25 முன்னோடியான கனவான்களுக்கான கல்லறை தோட்டங்கள் அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டே இருக்கும்.

ஒன்ட்டேரியோவின் இரங்கல் ஆணையம் (Bereavement Authority of Ontario) விதித்த உத்தரவுகளின்படி, ஒரு கல்லறைத் தோட்டத்திற்குள் ஒருக்கும் மனையிடத்திற்கு  ஐந்து பேருக்கு மேல் இல்லாமலும்  மொத்த கல்லறைத் தோட்டத்தில் ஒரே நேரத்தில் அதிகபட்சம் 10 பேருக்கு மிகாமலும் ப்ராம்ப்ட்டன் கல்லறை தோட்டத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஒவ்வொரு வருகையும் 15 நிமிடங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படும்.

அடுத்தடுத்த மனையிடங்களில் சில குடும்பங்கள் கலந்துகொள்ள நேர்ந்தால், இதைவிட அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். இதன் விளைவாக, நகரவாசிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி வரலாம்

உடல்ரீதியான சமூக விலகல் விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக, வருகை தருபவர்கள் அனைவரும்  எல்லா நேரங்களிலும் ஒருவருக்கு ஒருவர் (ஒரே வீட்டில் வசிக்காதவர்கள்) இரண்டு மீட்டர் (ஆறு அடி) இடைவெளி விட்டு இருக்க வேண்டும்.

ப்ராம்ப்ட்டன் கல்லறைத் தோட்டம் செயல்படும் நேரங்கள்:

- சனிக்கிழமை, மே 9:  மாலை 5 மணி முதல் 8 மணி வரை
- ஞாயிற்றுக்கிழமை, மே 10: மூடப்பட்டிருக்கும்

- திங்கட்கிழமை, மே 11 துவங்கி: திங்கள் முதல் வெள்ளி வரை , மாலை 4:30 முதல் 7:30 வரை; சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை, மாலை 3 மணி முதல் 7:30 வரை

ப்ராம்ப்ட்டன் கல்லறைத் தோட்டத்திற்கு வெளியில், இப்படியான நேர மாற்றங்கள் பற்றிய அறிவிப்பு பலகை வைக்கப்படும்.

சவங்களை அடக்கம் செய்தல் மற்றும் சவ அடக்கம் செய்வதற்கான காலியிடங்களின் விற்பனை போன்ற அத்தியாவசிய சேவைகள், முன் பதிவுகளின் பேரில் மட்டுமே தொடர்ந்து வழங்கப்படும். முன்பதிவு செய்து கொள்ள, எண் 905.874.2997 ஐ அழைக்குமாறு குடியிருப்புவாசிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ப்ராம்ப்ட்டன் கல்லறைத் தோட்டத்திற்கும், மற்றும் நகரமெங்கிலும் இருக்கின்ற முன்னோடியான கனவான்களுக்கான 25 கல்லறைத்தோட்டங்களுக்கும் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமே பொறுப்பு வகிக்கிறது. ப்ராம்ப்ட்டன் நகரில் இருக்கும் கல்லறைத்தோட்டங்களுக்கான பட்டியல் இங்கு கிடைக்கும்

**அறிஞர் கூற்று**

“இந்த அன்னையர் தினத்தில் குடும்பங்கள் தங்களது காலம் சென்ற தாய்மார்கள் மற்றும் பாட்டிமார்களுக்குக்கு மரியாதை செலுத்துவதன் முக்கியத்துவத்தை நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம்; இருப்பினும் கல்லறைத் தோட்டத்தினை மூட வேண்டும் என்ற முடிவினை நகர நிர்வாகம் எடுப்பது, காலத்தின் கட்டாயம் ஆகும். இந்த முக்கியமான சேவைகளை முடிந்த வரையில் பாதுகாப்பான முறையில் வழங்குவதற்காக, இந்த சனிக்கிழமையன்று ப்ராம்ப்ட்டன் கல்லறைத் தோட்டத்தினை குறைவான பேர்களே அணுகும் வகையில், மற்றும் குறைவான செயல்பாட்டு நேரங்களுடன் மீண்டும் திறக்கிறது; ஆனால் ஞாயிற்றுக்கிழமையன்று அதிக எண்ணிக்கையிலான வருகையாளர்கள் எதிர்பார்க்கப்படுவதால் கல்லறைத் தோட்டம் மூடப்படும். ” உடல் ரீதியான சமூக விலகல் பழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் நமது பார்வையாளர்கள் மற்றும் ஊழியர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை தொடர்ந்து பாதுகாக்க நாங்கள் விரும்புகிறோம், ஆனால் அதே சமயத்தில் இந்த சேவைகளை அணுக விரும்புவோருக்கு ஆதரவு தாருங்கள். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*



The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

BRAMPTON Service and Information Update

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca